பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6 00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 பங்குனி 18 ஞாயிற்றுக்கிழமை (31-03-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 125

# வெற்றிலைக்கேணியில் புலிகளால் அதிவேக தாக்குதல் படகு மூழ்கடிப்பு!

## 2 அதிகாரிகள், 8 கடற்படையினர் பலி

கொழும்பு, மார்ச் 31

ஸ்ரீலங்கா கடற்படையின் அதிவேகத் தாக்குதல்படகு ஒன்றை கடற்கரும்புலிகள் நேற்று வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் மூழ்கடித்தனர்.

இந்தத் தாக்குதலில் இரு கடற்படை அதிகாரிகள் மற்றும் எட்டு கடற்படையினர் பலியானதாக அறிவிக்கப்பட்டது.

திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்த கடற்படை அணி ஒன்றின் மீதே கடற்புலிகளின் பல படகுகள் சூழ்ந்து தாக்குதல் நடத்தியதாகவும் —

இத்தாக்குதலில் கடற்படையின் அதிவேகத் தாக்குதல் படகு ஒன்று மூழ்கடிக்கப்பட்டதாகவும் —

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பலாலி விமானத் தளம் மீது ஷெல்தாக்குதல் நடக்கலாம்!

### விமான சேவை இடைநிறுத்தம்

கொழும்பு, மார்ச் 31

தொண்டமானாறுப் பகுதியில் இருந்தவாறு பலாலி விமானத் தளத்துக்குள் இறங்கும் விமானங்கள் மீது ஷெல் தாக்குதல் நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் தயாராகி வருகின்றனர் என்ற தகவல் கிடைத்ததை அடுத்து —

கொழும்புக்கும் — பலாலிக்கும் இடையிலான விமானப் போக்குவரத்துகள் கடந்த வியாழக்கிழமை முழுவதும் இடைநிறுத்தப் பட்டிருந்ததாக மூத்த விமானப் படை அதிகாரிஒருவரை மேற்கோள் காட்டி செய்தி ஏஜென்ஸி ஒன்று அறிவித்தது.

எனினும் இந்த விமானப் போக்குவரத்து பின்னர் ஆரம்பிக்கப்பட்டதாக அந்த அதிகாரி தெரிவித்தார். (உ-6)

## அடுத்த இரு வாரங்களில் கொழும்பில் தாக்குதல்கள்

### புலிகள் திட்டமிடுகின்றனராம்

கொழும்பு, மார்ச் 31

அடுத்த இரு வாரங்களில் கொழும்பில் உள்ள முக்கிய பகுதிகள் மீது விடுதலைப் புலிகள் பெரும் தாக்குதல்களை நடத்த திட்டமிட்டு வருவதாக பாதுகாப்பு வட்டாரங்களுக்கு தகவல் கிடைத்துள்ளதாம்.

'திவயின' சிங்கள இதழ் மேற்கண்டவாறு செய்தி வெளியிட்டுள்ளது,

இத் தாக்குதல் முக்கிய இரு இலக்குகள் மீது மேற்கொள்ளப்படலாம் என நம்பப்படுகிறது. கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நிற்கும் கப்பல்கள் மீதும், எண்ணெய் சேமிப்பு தாங்கிகள் மீதும் இத் தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்றும் அந்த செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தாக்குதல்களுக்குத் தயார் நிலையில் இருக்கும் தற்கொலைப் படையினருக்கு மேலிடத்திலிருந்து உத்தரவுகள் கிடைத்துள்ளதாகவும் —

இவ்வாறான தாக்குதல்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் புலிகள் தாக்கினாலும்

## வடக்கில் திட்டமிட்டபடி இராணுவ நடவடிக்கை!

கொழும்பு, மார்ச். 31

கிழக்கில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் தீவிரமடைந்திருந்தாலும்—

வடக்கில் ஏப்ரலில் நடத்த ஏற்பாடாகியிருக்கும் பாரிய இராணுவ நடவடிக்கையை அரசு திட்டமிட்டபடி மேற்கொள்ளும்; அந்த நடவடிக்கையை நிறுத்தும் எண்ணம் ஏதும் அரசுக்கு இல்லை.

இராணுவ வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டதாக ''த ஐலண்ட்'' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கின்றது.

ஆனால் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட ''சூரியப் பிரகாசம்'' இராணுவ நடவடிக்கையை விட தற்போது மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கை பெரிதாக இருக்குமா என்பது குறித்து கருத்து வெளியிட அந்த வட்டாரங்கள் மறுத்துவிட்டன.

கடந்த 11 ஆம் திகதியின் பின்னர் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல்களினால் 135 படையினர் வரை பலியாகியுள்ளனர் என்றும்

(6ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. ஷெல் தாக்குதலில் நோயாளர் அருந்தப்பு!

கடந்த புதனன்று இரவு மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினர் நடத்திய ஷெல் தாக்குதலின் போது மட்டக்களப்பு பெரியாஸ்பத்திரி வார்ட்டில் தங்கியிருந்த நோயாளர்கள் மயிரிழையில் உயிர் தப்பினர்.

ஆஸ்பத்திரி கட்டடத்தை நோக்கி வந்த ஷெல் ஒன்று ஆஸ்பத்திரி மதிலோரத்தில் இருந்த தென்னை மரத்தில் பட்டு வெடித்ததால் பெரும் சேதம் தெய்வாதீனமாகத் தவிர்க்கப்பட்டது.

அதேவேளை நகரில் இருந்து படுவான்கரைப் பகுதியை நோக்கி தொடர்ச்சியாக படையினர் ஷெல்களை ஏவியதால் அப்பகுதி மக்கள் இரவை அச்சத்துடன் கழித்தனர். (உ-3)

## தமிழர் போராட்டத்துக்கு ஆதரவாக இந்திய நாடாளுமன்றில் குரல் தருக!

### சிவசேனைக்கு இந்துக்குருமார் மகஜர்

சாவகச்சேரி, மார்ச் 31

ஈழத் தமிழர்களின் போராட்டத்துக்கு ஆதரவாக, இந்திய நாடாளுமன்றம், மாநிலங்கள் அவை மற்றும் மாநில சட்ட மன்றங்களில் குரல் கொடுத்து—

யுத்தத்தை நிறுத்தி அரசியல் தீர்வை நாடுமாறு ஸ்ரீலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுங்கள்.

இவ்வாறு வடக்கு கிழக்கு மாகாண இந்து குருமார் ஒன்றியம் சிவசேனையின் தலைவர் திரு. பாலதக்கரேக்கு அனுப்பி வைத்த மகஜரில் கேட்டுள்ளது.

''ஸ்ரீலங்காவில் திட்டமிட்ட இராணுவ நடவடிக்கையால் இந்துமதம் அழியும் அபாய நிலை'' என்ற தலைப்பில் சிவசேனைத் தலைவருக்கு இந்துக் குருமார் ஒன்றியம் நீண்ட மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அம்மகஜரில் முன்வைக்கப் பட்டுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:-

★ தமிழீழத்தில் வாழும் மக்கள் சுதந்திரமாகவும், சுபீட்சமாகவும் வாழ தமிழர் தாயகம் ஒன்று தேவை.

★ ஈழத் தமிழர்களுக்காக போராடும் தமிழீழ விடுதலைப் புலிகளையும், அதன் தலைவர் வே. பிரபாகரனையும் அங்கீகரிக்க வேண்டும்.

★ மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள பொருளாதார, மருத்துவ, போக்குவரத்து, மீன்பிடி தடைகளை நீக்க இந்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 4 போராளிகள் வீரமரணம்

சாவகச்சேரி, மார்ச் 31

யாழ். மாவட்டத்தில் வியாழனன்று இடம்பெற்ற எதிர்பாராத வெடி விபத்தில் நான்கு விடுதலைப் புலிகள் வீரமரணமடைந்தனர்.

மேஜர் கலைவாணன் (இராமலிங்கம் ஸ்ரீமதிவாசன் — வண்ணார்பண்ணை), கப்டன் ஆழியன் (கணபதிப்பிள்ளை குகதாஸ் — சுன்னாகம்), கப்டன் தியாகன் (முகுந்தன் ஜெயம் — நீர்வேலி), லெப்டினன்ட் ஜீவன் (கணபதிப்பிள்ளை லோகதாசன்— குடத்தனை) ஆகிய போராளிகளே வீரமரணமடைந்தவர்களாவர்.

(உ-3)

## முல்லையில் சுப்பசொனிக் தாக்குதல்

சாவகச்சேரி, மார்ச் 31

ஸ்ரீலங்கா விமானப் படையின் ''சுப்பசொனிக்'' விமானங்கள் நேற்று நண்பகல் 12 மணியளவில் முல்லைத்தீவில் குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தியதாக அறிவிக்கப்படுகின்றது.

இத்தாக்குதலினால் ஏற்பட்ட [illegible] தெரியவரவில்லை. (உ-7)

## ஸ்ரீலங்கா = புலிகள் இருதரப்பு மீதும்

## சர்வதேச அழுத்தம் ஏற்பட இந்திய முயற்சி அவசியம்

### 5 தமிழ்க் கட்சிகள் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 31

இனப்பிரச்சினைக்கு இராணுவ முனைப்புக்களைத் தவிர்த்து பேச்சுவார்த்தை மூலம் இணக்கத் தீர்வைகாண்பதற்கு ஸ்ரீலங்கா அரசாங்கம் மீதும், விடுதலைப் புலிகள் மீதும் சர்வதேச அழுத்தம் பிரயோகிக்கப்பட ஏதுவாக முன் முயற்சிகளை இந்தியா மேற்கொள்ள வேண்டும்.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் நரேஷ்வர் தயாளிடம் ஐந்து தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு இவ்வாறு கோரிக்கை விடுத்தது.

ஈ. பி. டி. பி., ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், ஈரோஸ் ஆகிய கட்சிகளின் கூட்டமைப்பே இந்த கோரிக்கையை முன்வைத்தன.

அரசாங்கம் முன் வைத்துள்ள திட்டத்தில் நம்பிக்கை

[6 ஆம் பக்கம் பார்க்க]

## தொடரும் ஷெல் தாக்குதல்

பலாலி இராணுவ முகாமில் இருந்து தொடர்ந்து நேற்று முன்தினம் இரவும், நேற்றுக் காலையும் வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

நேற்று முன் தினம் இரவு 8.45 மணி முதல் அதிகாலை 2 மணி வரையும், நேற்றுக் காலை 8.30 மணி முதலும் மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதல்களில் தொண்டமானாறு, கெருடாவில் பகுதிகளிலும், மட்டுவில், கைதடி பகுதிகளிலும் ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன.

அதேவேளை — தொண்டமானாறு பகுதியில் ஹெலியும், புக்காரா விமானமும் வட்டமிட்டுச் சென்றன.

நேற்று நண்பகல் 12 மணியளவில் வெற்றிலைக்கேணி முகாமில் இருந்து தொடர்ச்சியாக ஷெல் தாக்குதலும், துப்பாக்கி பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டன.

[உ-3-15-36-117-173]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுணாவில்குளம்

## கண்ணகை அம்பாள்
## பங்குனி உற்சவம்
### 3 ஆம் வாரம்

**01-04-96** திங்கள் பகல் 12 மணிக்கு அபிடேகமும் மாலை 5 மணி முதல் நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

1. மேளக்கச்சேரி :- கைதடியூர் பழனிமலையும் மைந்தர்களும்.
2. சமயச் சொற்பொழிவு:- திரு. ஆறு திருமுருகன்
3. பட்டிமன்றம்:- வாழையடி வாழையாக நாம் வளர்த்து வந்த தமிழர் பண்பாட்டை மறந்து விட்டோமா?

வாதிடுவோர்

| மறந்து விட்டோம் | மறந்துவிடவில்லை |
|---|---|
| கே. எஸ். முத்துலிங்கம் | திரு. ரி. வேல்நம்பி |
| ஜே. கோகலே | எஸ். வாமன் |
| பி. அருந்தவநாதன் | என். நித்தியானந்தன் |

நடுவர்:- பொன் கணேசமூர்த்தி

4. வில்லிசை:- கலாவினோதன் கின்னமணி குழுவினர்

(41144) 3 ஆம் திருவிழா உபயகாரர்



சாவகச்சேரி — நுணாவில் கிழக்கு
[வைரவர் கோவில் என வழங்கும்]

## அருள்மிகு ஸ்ரீ கந்தசாமி கோவில்
## மகோற்சவ விழா

தேர்த்திருவிழா — **3-4-96** காலை 9 மணி
தீர்த்தத்திருவிழா — **4-4-96** காலை 9 மணி

அடியார்கள் வருகை தந்து எம்பெருமானின் திருவருள் பெற்றுய்யும் வண்ணம் வேண்டப்படுகின்றனர்.

நா. இராமச்சந்திரஐயர்
(ஆலயபரிபாலகர்)

[41139]



யாழ்.

## கலை, வர்த்தக கல்லூரி
## C. C. A.
## A/L 96, 97, 96 மீட்டல்

ஆரம்பம்: **3 – 4 – 1996**
புதன்கிழமை பி. ப. 3-00 மணி

குறிப்பு:
பொருளியல் ஆசிரியர் திரு. கு. உதயன் அவர்களால் **96**ஆம் ஆண்டு மாணவர்களுக்கு புதன்கிழமை பி. ப. 3-00 மணிக்கும், **97**ஆம் ஆண்டு மாணவர்களுக்கு 4-00 மணிக்கும் மாணவர் நலன் கருதிய நேர அட்டவணை நிறுவனத்தில் வைத்து சமர்ப்பிக்கப்படும்.

— நிர்வாகம்

[41137]



## BEACON STUDY CENTRE

வதிரி, (வடமராட்சி மகளிர் கல்லூரி முன்பாக) கரவெட்டி.

## A/L 97, 96, 95 மீட்டல்

★ கணித, உயிரியல் பிரிவுகள் ★

ஆரம்பம்: **03 – 04 – 96** புதன்
பிற்பகல் 3-00 p.m.

குறிப்பு: விண்ணப்பங்கள் **01-04-96**இல் இருந்து ஏற்றுக் கொள்ளப்படும்.

— நிர்வாகி

(41271)


## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி நாகேஸ்வரி மதியாபரணம்

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| **1939 — 07 — 16** | **1994 — 03 — 24** |

திதி: **31 - 03 - 96**

பாலூட்டிப் பாலன்னம் பரிந்தூட்டிப் பாலித்து
மாலறுத்து மதியூட்டி அருகிருந்து அரவணைத்து
சிலமொடு எனைவளர்த்த என்நாயே! என் அம்மா
வேலையினி இல்லையென்றோ விண்விழைந்து
சென்றாய்.

நின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கும்:
— குடும்பத்தினர்.

கட்டுவன்,
தெல்லிப்பழை.

(41270)

## 'ஹபரண' இன்று வரும்

மந்திகை, மார்ச் 31

'ஹபரண' கப்பல் இன்று பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்துசேரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கொழும்பு சென்றிருக்கும் யாழ். போதனா வைத்தியசாலைத் தூதுக் குழுவும் இக்கப்பலில் வரும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

(உ-15-174)

## தமிழ்ப் பெண் கைது

கொழும்பு, மார்ச் 31

சித்த சுவாதீனமற்றவர் போல் நடித்து கஹவெலஸ்வெவ அரச பாடசாலைக்குள் பிரவேசித்து மாணவர்களிடமிருந்து பாடசாலை பற்றிய விபரங்களை விசாரித்ததாகக் கூறப்படும் — சுமார் இருபது வயதுடைய — தமிழ்ப் பெண் ஒருவரை பொலீஸார் கைது செய்துள்ளனராம். (உ-6)

## உருத்திரபுரத்தில் உத்தர விழா

கிளிநொச்சி, மார்ச் 31

கிளிநொச்சி மாவட்டத்தின் வரலாற்றுப் பெருமையும், பழைமையும் மிக்க உருத்திரபுரீசுவரர் ஆலயத்தில் பங்குனி உத்தரப் பெருவிழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளது.

அன்று காலை 9 மணி முதல் விசேட அபிஷேகங்கள், பூசைகள் நடைபெற்று நண்பகலில் பெருமான் வீதி உலா வருவார்.

விசேட சமயச் சொற்பொழிவுகளும் இடம்பெறும்.

(அ-124)

## சிப்பாயை கைது செய்ய உத்தரவு

கொழும்பு, மார்ச் 31

கிளிவெட்டி குமரபுரத்தில் 28 அப்பாவித் தமிழர்கள் படையினரால் படுகொலை செய்யப்பட்ட சம்பந்தப்பட்டவர் எனக் கருதப்படும் — தலைமறைவாகியிருக்கும் — இராணுவச் சிப்பாயைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதற்கிடையில் இச்சம்பவம் தொடர்பான பூர்வாங்க வழக்கு விசாரணை மூதூர் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் இருந்து திருமலை நீதிமன்றுக்கு மாற்றப்பட்டது. விசாரணைகள் அடுத்த 10, 11 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. (உ-3)

## பேரவைக் கூட்டம்

கிளிநொச்சி, மார்ச் 31

தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவையின் மாதாந்தக் கூட்டம் எதிர்வரும் 3 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செஞ்சிலுவைச் சங்க கேட்போர் கூடத்தில் நடைபெறவிருக்கிறது. (ஆ-3)


## பொருளியல்

**A/L 96 - 96 மீட்டல் 97**

ஆசிரியர்:
திரு. R. இராஜேஸ்வரன்

ஆரம்பம்:
**03 - 04 - 96**
புதன் பிற்பகல் 4 மணி

இடம்:- கச்சாய் வீதி,
கொடிகாமம்.

(41209)



## ஆண்டு 5 புலமைப்பரிசில் '95

பயிற்சி - 05 (விடைகளுடன்)

**31-03-96** எல்லா புத்தகசாலைகளிலும் பெறலாம்.

★ பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

விவரங்களுக்கு: **BOND**
த. பெட்டி: 140, யாழ்ப்பாணம்

(41142)



★ தவக்காலத்தை முன்னிட்டு ★

## திருமறைக் கலாமன்றம்

வழங்கும்

## "கல்வாரிச் சுவடுகள்"

(பக்தி, இசை, உரை நாடகம்)

காலம்: **31 – 03 — 96 (இன்று)**

இடம்: கலட்டி. றோ. க. வித்தியாலயம்
பருத்தித்துறை.

நேரம்: மாலை 7-00 மணி.

பிரவேசம்: இலவசம்

'கல்வாரியின் சுவடுகளில் இன்றைய எம் துயரச் சுமைகள்.....'

(40402)



## அறிவித்தல்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் (**G. A. Q. 97**)

பதிவு செய்வதற்குரிய விண்ணப்ப படிவங்கள் எமது கல்லூரிக்கு வந்து சேர்ந்துள்ளமையால் ஆவணங்களை ஒப்படைத்த சகல மாணவர்களும் **02 — 04 — 96** (செவ்வாய்) **9** மணிக்கு வருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நிர்வாகி
S. அருள்நங்கை

## புதிய உயர் கல்லூரி

(அரசினர் வைத்தியசாலை முன்பாக)
வினாசித்தம்பி லேன்,
சாவகச்சேரி.

(சி-4155)



## A/L 97, 96, 96 மீட்டல்

புதிய உயர் கல்லூரி நிர்வாகத்தின் கீழ் புதிய உயர் கல்லூரி ஆசிரியர்கள் வடமராட்சியில் புலோலி கல்வி நிலையம், உபயகதிர்காமம், புலோலியில் கற்பிப்பர் என்பதனை அறியத்தருகின்றேன்.

வகுப்பு ஆரம்பம்: **10 — 04 — 96** 3-00 மணி.

★ அனுமதிகளை **05 — 04 — 96** இல் பெற்றுக் கொள்ளவும்.

நிர்வாகி,
எஸ். அருள்நங்கை.

(சி-4154)



என்றும் எங்கும்

## பொருளியற் கல்லூரி

நேற்று வன்னியில்
இன்று தென்மராட்சியில்
நாளை வடமராட்சியில்

## பொருளியற் கல்லூரி

சதா பொன்ஸ் கல்வி
நிறுவனத்தில் இயங்கவுள்ளது
(மாலு சந்தி, நெல்லியடி.)

## A/L 96, 97 கலை, வர்த்தகம்

ஆரம்பம்: **05 — 04 — 96** வெள்ளி 3-00 p. m.

**DAY CLASS** வெள்ளி 2-00 p. m.

★ ஒரு பிரிவு மட்டுமே ஆரம்பிக்கப்படுமாதலால் குறிப்பிட்டளவு மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும். 1-4-96 முதல் 3-4-96 வரை அனுமதிகள் வழங்கப்படும்.

(41146)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய வெள்ளி 05 - 04 - 1996

" பாதுகாவலன் "

# உயிர்ப்பு விழா சிறப்புமலர்

✶ 'கர்த்தர் நகரத்தை காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்' ✶

உயிர்ப்பு ஞாயிறு 07 - 04 - 1996

# கண்ணீரும் கவலையும் வீண்போகமாட்டா!

## ஏன் இந்த நிகழ்வு?

ஐந்து மாதங்கள் கழிந்து, காவலன் வாசகர்களை மீண்டும் வேறோர் ஊடகத்தின் வழியாகச் சந்திப்பதில் நாம் மகிழ்வடைகின்றோம். தொடர்ந்தும் மாதாந்தம் ஒரு தடவையாகிலும் இவ் வாய்ப்பு நமக்கு எட்டும் என்ற எதிர்பார்ப்புடன், இதை வழிவகுத்துத் தந்த எம் நல்ல இதயங்களுக்கு முதலில் நன்றி கூறி நிற்கின்றோம்.

எமது வாழ்க்கையின் ஒவ்வொரு நிகழ்வும் ஏதோ ஓர் அர்த்தமுடையதாயுள்ளது. அந் நிகழ்வு அசாதாரணமானால் அதன் ஆழமான அர்த்தம் அதில் செறிந்திருக்கும். அதனை உய்த்துணர்ந்து புரிந்து கொள்வதனால்தான் நம் வாழ்வு வளம்பெறும்.

உலக வரலாற்றில் மிகவும் வியப்புக்குரியதும் அற்புதமுமான நிகழ்வுதான் இயேசுக் கிறிஸ்துவின் சாவும் உயிர்ப்பும். நம் தந்தையாம் இறைவனின் மீட்புத் திட்டத்தில் இறைமகன் கிறிஸ்துவின் சாவு இன்றியமையாத ஒரு நிகழ்வாகத் திகழ்கின்றது. யூதர்களுக்கு ஓர் இடறலாகவும், கிரேக்கர்களுக்கு மடமையாகவும் இருந்த கிறிஸ்துவின் சாவு, மனுக்குல மீட்பின் மறைபொருளைக் கொண்டுள்ளது; இறைத் தந்தையின் வல்லமையையும் ஞானத்தையும் எடுத்துக் காட்டுகிறன்து. (I கொரி. I: 23, 24) கிறிஸ்துவின் சாவு மகிமையின் வாசலாகி, அவரின் உயிர்ப்பு அடிமைத் தளைகளை அறுத்தெறிந்த நிகழ்வாயிற்று.

ஈழத் தமிழ் மக்களின் வரலாற்றில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகிய அண்மைக் கால வலிகாம இடப்பெயர்வும் மக்கள் அனுபவிக்கும் சொல்லொணாத் துன்பங்களும் வேதனைகளும் கூட அவர்களை உரிமை வாழ்வின் நுழைவாயிலுக்கு இட்டுச் செல்ல இறைவன் வழி சமைப்பாராக!

- "காவலன்" ஆசிரியர் -

## ★ யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம்

சென்ற ஐப்பசி மாத இறுதியில் நடந்த மாபெரும் இடம் பெயர்வினால் எம்மக்கள் பட்ட சொல்லொண்ணா துன்ப துயரங்கள் எம் மனக் கண்களிலிருந்து இன்னமும் அகலவில்லை. இப்படி இடம் பெயர்ந்தவர்கள் குடாநாட்டிலும், வன்னிப்பகுதிகளிலும் பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதை நாமறிவோம்.

இவ்வேதனைகள் மத்தியில் மீண்டும் ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உத்தானம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## துன்ப துயரங்கள் எமது வெற்றிப் படிகள்

### ★ குரு முதல்வர் எஸ். ஜே. இம்மானுவேல்

கடந்த ஆறு ஆண்டுகளாக எண் திசையிலும் தாக்கப்பட்டவர்களாக பல இழப்புக்களின் மத்தியில் அலை அலையாக மூடை முடிச்சுகளுடன் ... வர்ணிக்க முடியாத வேதனையுடன் ஐந்து லட்சம் மக்கள் சோகம் நிறைந்த சரித்திரம் படைத்தனர். இன்று தென்மராட்சி, வடமராட்சி, வன்னியென்று வனாந்தரத்தில் இஸ்ரவேலர் வாழ்ந்தது போல் வாழ்கின்றோம்; வாழத் துடிக்கின்றோம் ... விட்டுவந்த வீடுகளையும் வசதிகளையும் நினைத்து ஒப்பாரி புலம்புகின்றோம்; கனவு காண்கின்றோம்; கண்ணீர் சிந்துகின்றோம். ஆனால் நம்பிக்கை இழக்கமாட்டோம்.

இறைவனின் மீட்புத் திட்டத்தில் இஸ்ரவேல் மக்கள் எகிப்தியரின் அடிமைத்தனத்திலிருந்து வெளியேறிய விடுதலைப் பயணம், அவர்கள் வனாந்தரத்தில் அனுபவித்த பசி, தாகம், மனக் குழப்பம், தோல்வி — இவை அனைத்தும் இன்று எங்கள் அனுபவமாக இருக்கின்றன.

எங்கள் பயணமும் விடுதலைப் பயணம். எங்கள் துன்ப துயரங்களும் வெற்றிப் படிகள்.

இயேசுவின் பாடுகளும் மரணமும் புதிய வாழ்வின் உயிர்ப்பாக மாறின. எமது தற்போதைய துன்ப துயரங்கள் எமக்கு கூடிய சீக்கரத்தில் நீதியான சமாதானத்தை அருளுவதாக!

## ★ யாழ். ஆயர் தலைமையில் மிருசுவிலில்

## பரிசுத்த வார சடங்குகள்

### புனித நீக்கலார் ஆலயம்

| | | | |
|---|---|---|---|
| மார்ச் 31 | குருத்து ஞாயிறு | — | காலை 7.30 மணி |
| ஏப்ரல் 1 | திங்கள் (பரிசுத்த தைலம் மந்திரித்தல்) | — | காலை 7 மணி |
| ஏப்ரல் 4 | பெரிய வியாழன் | — | மாலை 5 மணி |
| ஏப்ரல் 5 | பெரிய வெள்ளி | — | மாலை 5 மணி |
| ஏப்ரல் 6 | பெரிய சனி | — | இரவு 11 மணி |
| ஏப்ரல் 7 | உயிர்ப்பு ஞாயிறு | — | காலை 7.30 மணி |

உயிர்ப்பு விழா
↓
காவலனின் வாழ்த்துக்கள்
↑
தமிழ் புதுவருடம்

## சாவு: வாழ்வுக்கு வழி

சாவு மனித வாழ்வில் பெரும் துன்பம் விளைவிக்கும் அனுபவமாக அமைகிறது. இழப்பினில் பெரும் இழப்பாகவும் அது உள்ளது. அதிலும் அன்பர்கள், இளையவர்கள், வேண்டியவர்கள் என்று கூறின் அவர்களது இழப்பை ஈடுசெய்ய முடியாது போய் விடுகின்றது. நேற்று இருந்தவர் இன்றில்லை என்று காணும்போது பல வேளைகளில் அதைப் புரிந்து ஏற்றுக் கொள்வதே ஒரு பெரிய பிரச்சனையாகிறது.

சாவது நியதி என்றாலும் இப்படியும் மரணங்களா? இன்று அனுதினம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மனித உயிர்க் கொலைகளும், மரண ஓலங்களும், மரண அவலங்களும் சிந்திப்போரை வியப்பிலும், விரக்தியிலும் வேறு சிலரை கசப்பிலும், கோபத்திலும் ஆழ்த்துகின்றன,

இயேசுக் கிறிஸ்துவின் மரணத்தை உணருவோரும், அவரது உயிர்ப்பை நம்புவோரும் சாவைக் கண்டு அஞ்சுவதில்லை; சாவினால் விரக்தி அடைவதுமில்லை. "எனது உயிரை என்னிடமிருந்து பறிப்பவர் எவருமில்லை" — என்று தாமாகவே தம் உயிரைக் கையளித்து மரணிக்க மனமுவந்த இயேசு, தனது வாழ்வில் சாவை ஒரு தோல்வியாகவல்ல; வெற்றியின் ஏணிப்படியாகக் கருதினார். தமது சேவை வாழ்வில் அன்பு, மன்னிப்பு, நீதி, உண்மை, தூய்மை, ஒருமைப்பாடு போன்ற இறைவாழ்வின்

(4ஆம் பக்கம் பார்க்க)

அருட்திரு.
ஜீவா போல் அ. ம. தி.

## பரிசுத்த வார வழிபாடுகள் நடைபெறும் இடங்கள்

★ பருத்தித்துறைப் பங்கு
- புனித தோமையார் ஆலயம்
- சற்கோட்டை
- பணற்காடு
- குடத்தனை
- புலோலி
- பொலிகண்டி

★ கரவெட்டிப் பங்கு
- புனித மரியாள் ஆலயம்
- உடுப்பிட்டி
- துன்னாலை
- வரணி
- இயற்றாளை

★ தாளையடிப் பங்கு
- புனித அத்தோனியார் ஆலயம்
- செம்பியன்பற்று
- குடாரப்பு
- நாகர் கோவில்

★ மிருசுவில் பங்கு
- புனித நீக்கலார் ஆலயம்
- கச்சாய் (கொடிகாமம்)
- பண்டிதர் குடியிருப்பு
- கிளாலி — புனித அந்தோனியார் ஆலயம்

★ சாவகச்சேரிப் பங்கு
- புனித விகோரியார் ஆலயம்
- மீசாலை
- ஆனந்த குடியிருப்பு

★ முகமாலைப் பங்கு
- அன்னை வேளாங்கன்னி ஆலயம்
- இத்தாவில்
- புலோப்பளை
  - புனித மரியாள்
  - புனித இராயப்பர்
- வண்ணாங்கேணி

★ மட்டுவில் பங்கு
- புனித லூர்து அன்னை ஆலயம்
- நுணாவில்
- ரயர் கொம்பனி — கைதடி

★ நாவற்குழிப் பங்கு
- புனித அந்தோனியார் ஆலயம்

★ தனங்கிளப்பு பங்கு
- தனங்கிளப்பு
- மறவன் புலோ

★ கரம்பகம் (எழுதுமட்டுவாள்) பங்கு
- புனித [illegible] ஆலயம்

## சாவு தந்த வாழ்வு

பாஸ்கா நிகழ்ச்சிக்கு இரு பக்கங்கள் உண்டு. பாவமும் அதன் விளைவான துன்பமும் ஒருபக்கம்; தெய்வீக அருளும் அதன் கொடையான சமாதானமும் புதுவாழ்வும் மறுபக்கம்.

எமது இவ்வுலக வாழ்வு எமது இறப்புடன் முடிவடைகிறது; ஆனால் விண்ணக வாழ்வு தொடங்குகிறது. இந்த முடிவுக்கும் தொடக்கத்துக்கும் எல்லை போன்று இருப்பதுதான் எமது பாஸ்கா. கிறிஸ்து பாடுகள், துன்பத்தின் வழியாக மரணத்தை வென்று உயிர்த்த கிறிஸ்துவாக புதிய வாழ்வையும் சமாதானத்தையும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

அருட்சகோ. அ. யூட்ஸ் கருணாகரன்
(புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி)

யாழ். மறைமாவட்ட

## இடம்பெயர்ந்த நிறுவனங்களின் இன்றைய இருப்பு

★ யாழ். ஆயர் இல்லம்:
— தவசிகுளம், மிருசுவில்

★ புனித சவேரியார் உயர் குருமடம்:
— உருத்திர புரம், கிளிநொச்சி

★ புனித மடுத்தீனார் இளங் குருமடம்:
— புலோலி, புனித சூசையப்பர் ஆலயம்

★ மறைக் கல்வி நடுநிலையம்:
— மிருசுவில்

★ மனித முன்னேற்ற நிலையம்:
— இன்பகம், கிளிநொச்சி
— தவசிக்குளம், மிருசுவில்

★ புனித பத்திரிசியார் கல்லூரி:
— வரணி, மத்திய மகா வித்தியாலயம்

★ 'அமதி' மறை உரைஞர் இல்லம்:
— சக்கோட்டை, புனித சவேரியார் ஆலயம்

★ திருக்குடும்பக் கன்னியர் தலைமையகம்:
— மிருசுவில்
— கிளிநொச்சி

★ திருச்சிலுவை சுகநல நிலையம்:
— குழந்தை இயேசு நகர், கிளிநொச்சி

★ திருச்சிலுவைக் கன்னியர் நடமாடும் மருத்துவ சேவை:
— பளை

★ புனித வளனார் வயோதிபர் இல்லம்:
— மாங்குளம்

★ தோலகட்டி செபமாலைக் கன்னியர்:
— புனித வளனார் மடம், தமிழ்ச்செல்வன் வீதி, உருத்திரபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புதிய Impulse Sealer With Cutter (பொலித்தீன் வெட்டுதல், ஒட்டுதல்) Lumala ஆடவர் சைக்கிள், National RX 45, விற்பனைக்குண்டு. ப. நவரத்தினராசா, வில்சன் வீதி, 1 ஆம் கட்டை, கிளிநொச்சி. (40488)

### தேவை

வெற்று பியர் போத்தல்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் கொள்வனவு செய்யப்படும். தொடர்பு கொள்ளவும். சத்தியா மதுபானச்சாலை, விக்கினேஸ்வரா களஞ்சியம் அருகில், கண்டி வீதி, சாவகச்சேரி. (41140)

### வாங்கப்படும்

பாவித்த கொப்பி, புத்தகங்கள், சஞ்சிகைகள் கொள்வனவு செய்யப்படும். நிரோஜன் சிற்றுண்டியகம், பிரதான வீதி, பருத்தித்துறை. [41258]

### அச்சக மெஷின்

பிளேடின் மெசின் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தயா அச்சகம், (மில்க்வைற் கம்பனி அருகாமை), மீசாலை சந்தி, அல்லாரை வீதி, மீசாலை. (41262)

### புவியியல் A/L 1997

சுற்றாடற் புவியியல், பூமித்தாய் (சூழலியல்), படவேலை, புள்ளிவிபரப் படவரைகலை ஆகிய நூல்கள் 25 சதவீதக் கழிவுடன்–பெற கலாநிதி க. குணராசா, கமலாம்பிகை நூல் வெளியீட்டகம், 10, மகளிர் கல்லூரி வீதி, கற்குழி, சாவகச்சேரி. (41108)

### C. I. M. A. CLASS

C. I. M. A. Stage - I Class (London Accountancy) 3-4-96 அன்று ஆரம்பமாகிறது. தொடர்புகளுக்கு: S. Naresh [ஆசிரியர் North Ceylon Technical Institute] மொடேர்ன் ரியூட்டரி, 1ஆம் கட்டை, பருத்தித்துறை. [ரஞ்சன் பூங்காவிற்கு அருகில்] [40395]

### RADIO & ELECTRONICS

மேற்படி பயிற்சி நெறி [Radio, T. V., Video Deck, உட்பட] செய்முறைப் பயிற்சிகளுடன் ஆரம்பமாகிறது. தொடர்புகளுக்கு: N. Satkunarajah (ஆசிரியர் North Ceylon Technical Institute] மொடேர்ன் ரியூட்டரி, 1ஆம் கட்டை, பருத்தித்துறை. [ரஞ்சன் பூங்காவிற்கு அருகில்]. [40393]

**பிரத்தியேக வகுப்புகள்**

**A/L 96, 97**

தமிழ், இந்துசமயம், இந்துநாகரிகம்

''கோப்பாய் சிவம்''

முகவரி:
கு. ஜெகதீஸ்வரசர்மா
வேரற்கேணிக் கந்தசுவாமி கோயில் அருகில்,
மட்டுவில்.
கச்சாய் வீதி,
கொடிகாமம்.
(41253)

---

தென்மராட்சியில்

## பொருளியற் கல்லூரி

ஐயா கடைச்சந்தி, மீசாலை,
சாவகச்சேரி

**AL 96, 97 கலை, வர்த்தகம்**

| | |
|---|---|
| பொருளியல்:- | வரதராஜன் |
| கணக்கியல்:- | ஸ்ரீ |
| வர்த்தகம்:- | வரதன் |
| அளவையியல்:- | சயந்தன் |
| புள்ளி விவரவியல்:- | தவசேகர் |
| இந்துநாகரிகம், இந்து சமயம்:- | ஜோதீஸ்வரன் |
| தமிழ்:- | கணேசலிங்கம் |
| கிறீஸ்தவம்:- | நிரஞ்சன் |
| அரசியல்:- | பஞ்சாட்சரம் |
| புவியியல்:- | மனோ |

**ஆரம்பம் 03 - 04 - 96**
புதன் **3 - 00** P. M.

**A/L 96 DAY CLASS**
(A/L **95** பரீட்சை எடுத்த மாணவர்களுக்கு)
ஆரம்பம்:- **3 – 4 – 96** புதன் 2. 00 P. M.

★ அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

(41225)

---

உ
சாமியே சரணம் ஐயப்பா
வடலியடைப்பு பாரத்தனை

## ஐயனார் ஆலய வருடாந்த குளிர்த்தி விஞ்ஞாபனம்

ஆலய வருடாந்த விழாவை முன்னிட்டும்
நாட்டின் நலம் வேண்டியும்
சிறப்பு வழிபாடு

இடம்: கைதடி தெற்கு தாக்கட்டில் பித்தான்
ஞானவைரவர் ஆலயம்

காலம்: **01 – 04 – 96** திங்கட்கிழமை
காலை 9 மணி முதல் நடைபெறும்.

மங்கள இசை
கைதடி திரு. தங்கவேல் குழுவினர்

சிறப்பு விடயமாக
ஞானவைரவர் ஆலய ஆதீனகர்த்தா
சு. குணசேகரன் அவர்கட்கு
குருப்பட்ட அபிசேகமும் இடம்பெறும்.
11.30 - 12.30 சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும்
விடயம்

✶ ''மண்ணில் நல்ல வண்ணம்'' ✶

வழங்குபவர்:- அருள்மணி ஆறு. திருமுருகன்


அடியார்கள் அனைவரையும் கலந்து எம்பெருமானை வணங்கி நல்வாழ்வு பெறுமாறு வேண்டுகிறோம்.

(41125) ஐயப்ப அடியார்கள்

---

## இரண்டாம் ஆண்டு நீங்காத நினைவலைகள்

மண்ணில் மலர்வு: 05 — 03 — 1949



இறைவன் திருவடியில்: 31 — 03 — 1994

**பிலிப் செபமாலை (சின்னத்தம்பி)**

(குடாரப்பு உத்தரிய மாதா ஆலய முன்னை நாள் சங்கிஸ்தார்)

குடாரப்பு மண்ணிலே மைந்தனாக தவழ்ந்து வையகம் போற்ற வாழ்ந்தீர்கள்.

பார்வையில் கருணைக் கடலாய் திகழ்ந்தீர்கள்.

மற்றோரை அன்புடனே அரவணைத்து வாழ்ந்த எங்கள் ஆருயிர் தெய்வமே என்நாளும் மறவோம் உம்மை.

● அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திப்பதோடு. அன்னாரின் ஆத்மா சாந்திக்காக 03 - 04 - 96 பிற்பகல் 5 மணிக்கு புனித உத்தரிய மாத ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் துயரால் வாடும்:
[illegible]

குடாரப்பு,
நாகர்கோயில்.
(41212)

---

| உயிர்ப்பு விழா மலர் |

# விடுவிக்கப்பட்ட குரவரின் இதயத்திலிருந்து...

யாழ். குடாநாட்டில் இருந்து எண்ணற்ற இடம் பெயர்ந்தோர் வன்னிக்கு வருகை தந்தனர். அவர்களது துயர் துடைக்க நிவாரண, உணவுப் பொருள்கள் வழங்குதல் மற்றும் தற்காலிக குடிசைகள் அமைத்தல் போன்ற பல தேவைகளுக்காக தென் பகுதியில் சமூக பொருளாதார அபிவிருத்திநிறுவனத்தில் [செடெக்] இருந்து வடமாகாணம் நோக்கிஒருபெருந்தொகை பணத்தோடு நாம் பயணம் செய்தோம். அச்சமயம் நானும், எனது சக குரு இம்மானுவல் பயசும் இலங்கைப் புலனாய்வுப் பிரிவால் கைது செய்யப்பட்டோம். 7/11 தொடக்கம் 7/12 வரை நாம் சிறையிலிருந்த காலத்தில் எமக்காக செபித்து, உபவாசமிருந்து, திருவிழிப்பு வழிபாடுகள் நடாத்தி, திருப்பலிகள் ஒப்புக் கொடுத்து, இன்னும் பல்வேறு வழிகளிலும் எமது விடுதலைக்காக வேண்டிய இலங்கை ஆயர் மன்றத்தினர் சக குருக்கள், துறவிகள், பொது நிலையினர், கத்தோலிக்க — இந்துமத நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அருள் தந்தை
S. H. ஜெபநேசன்

---

### சாவு: வாழ்வுக்கு...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயர் மதிப்பீடுகளுக்காக அர்ப்பணித்த அண்ணல் தம்மை அணு அணுவாகக் கொடுத்து ஈகையின் சிகரமாகத் தன் உயிரை வேள்வியாக்கினார்.

உடலை விட்டு உயிர் பிரியும் நியதியை மாற்ற முடியாது. மனித உறவுகளில் உண்டாகும் பிரிவுகள் எஞ்சியிருப்போருக்கு உளவேதனையை உண்டாக்கும். ஆயினும் ''அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு'' என்பதுபோல தன் உயிரை கொடுப்பதிலும் மேலான அன்பில்லை என இயேசு சொன்னார். உண்மை அன்புக்கு எனத் தம் வாழ்வில் தம்மை ஈகை செய்வோரின் மரணம் அவர்களின் நிறைவின் சிகரமாகும். அவர்களின் நினைவுகள் மனித மனங்களை விட்டு அகலமாட்டா. கிறீஸ்துவோடு மரணத்துக்குள் புதைக்கப்பட்டால் அவரோடு வாழ்வுக்குள் மீண்டும் உயிர் பெறுவோம் என்ற நம்பிக்கையில் ஒருவன் தன்னைப் பிறருக்கென அர்ப்பணிக்க வேண்டும்.

விதை மடிந்து செடி வளர்வதுபோல மனித வாழ்வின் மனமுவந்த கையளிப்புக்கள் மனித வாழ்வு பல கோடி மலர்களாக மலர வழி சமைக்கும். கோடான கோடி மனித மனங்களில் கிறிஸ்து வாழ்வதுபோல மனிதரும் நிலைத்து வாழ 'மனித கையளிப்புக்கள்' தேவையாகின்றன. ★

### கண்ணீரும்--

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆகிய மறைபொருளை நினைவு கூரும் பாஸ்கு விழாவை கொண்டாடுகின்றோம்.

''துன்பத்தில் நீங்கள் புடமிடப்படுகையில் ஏதோ எதிர்பாராதது நேர்ந்து விட்டது என மலைத்துப் போகாதீர்கள்; எந்தளவிற்கு கிறிஸ்துவின் பாடுகளில் நீங்கள் பங்கு கொள்ளுகின்றீர்களோ அந்தளவுக்கு அகமகிழுங்கள்! அவரது மகிமை வெளிப்படும் போது உவப்புடன் அக்களிப்புக் கொள்ளுவீர்கள்.'' என்று புனித இராயப்பர் தமது நிருபத்தில் சொல்லுவதுபோல், நாங்கள் படும் வேதனைகளும் துன்பங்களும், கண்ணீரும் கவலைகளும் வீண்போக மாட்டா. இயேசுவோடு இவற்றைச் சுமந்தால் நாம் ஒருநாள் எமது முழு விடுதலை வாழ்வைப் பெறுவோம் என நம்புகின்றோம். அனைத்தும் இழந்து, அதிர்ச்சியும் கவலையும் கொண்டு வாழும் நம்மனைவருக்கும் உத்தானமாகிய இயேசு அமைதியும் மனநிறைவும் அளிக்கவேண்டி அனைவருக்கும் எமது பாஸ்கா வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். ★

### கவலையும் கண்டனமும்

வலிகாமத்திலிருந்து இடம் பெயர்ந்து குடிசைகளில் வசித்து வந்த பொதுமக்கள் மீது, 16-03-96 அன்று அதிகாலை 4 மணியளவில் ஸ்ரீலங்கா விமானப் படையின் உலங்கு வானூர்திகள் நடத்திய கொடூரக் குண்டுவீச்சுத் தாக்குதலில் கொல்லப்பட்ட ஏழு சிறுவர்கள் குழந்தைகள் உட்பட 17 அப்பாவிப் பொது மக்களினது குடும்பத்தினருக்கும்,படுகாயமடைந்த 60க்கும் அதிகமானோருக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தனது ஆழ்ந்த கவலையையும், அனுதாபத்தையும் தெரிவித்துள்ளதுடன், இந்த ஈவிரக்கமற்ற வான் தாக்குதலை அவர் வன்மையாக கண்டித்துமுள்ளார்.

### சாவு தந்த...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வழங்குகின்றார்.

பழைய ஏற்பாட்டிலே பாஸ்கா நிகழ்ச்சியை இஸ்ரவேல் மக்கள் எகிப்திய அடிமைத்தனத்தைக் கடந்த நிகழ்ச்சியின் நினைவாகக் கொண்டாடினார்கள். கிறிஸ்துவுக்கு முன்னோடியாக விளங்கிய மோயீசன் தலைமையில் யாத்திரை செய்த இஸ்ரவேலியருக்கு இது ஒரு மறக்கமுடியாத சம்பவம்.

புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் புதிய பாஸ்கா இடம் பெற்றது. மனுக்குலத்தை மீட்க மனித உருவில் வந்து தன்னைத் தாழ்த்தி சாவை ஏற்கும் அளவுக்கு — அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்கு—கிறிஸ்து தன்னை எமக்காகக் கையளித்தார். அவரின் கையளிப்பு முழுமை பெற்றது.

சிலுவை அவருக்கு துன்பத்தின் சின்னமல்ல; மாறாக மகிழ்வின் சின்னமாக இருந்தது. தன்னை மகிமைப்படுத்தியதன் ஒரே பேறான மகனைத் தந்தை உயிர்ப்பின் மூலம் மகிமைப் படுத்தினார். சாவு அவரை தன்பிடிக்குள் வைத்திருக்க முடியவில்லை. இயேசுவின் உயிர்ப்பின் மூலம் வாழ்வு உலகில் பிறந்தது; தீமைக்கு சாவு மணி அடிக்கப்பட்டது; விண்ணக வாழ்வுக்கு வாயில் திறக்கப்பட்டது. இது சாவு தந்த வெற்றி; சாவு தந்த வாழ்வு.

இன்றும் அந்த பாஸ்கா நிகழ்ச்சி தொடர்கின்றது. இன்றைய காலகட்டத்திலே வன்செயல்கள் வெடித்து, இனங்கள் பிளவுபட்டு, எங்கும் துன்பம். சொந்த இருப்பிடங்களை விட்டு 'யாத்திரைப்'பயணத் தில்ஓடிஅகதி முகாம்களிலும் தெருவோரங்களிலும் அநாதைகளாக, ஆதரவற்றவர்களாக இருப்போர் எத்தனையோ ஆயிரம் பேர். துன்பம், கவலை, நோவு, பிணி, போர் அவலங்கள், இடம்பெயர்வுகள் என்பவற்றால் முடக்கப்பட்ட வாழ்வு விடுவிக்கப்படும் போது தான் உயிர்ப்பு இடம் பெறுகின்றது. இவை உயிர்ப்பு மகிமையின்ஆரம்பப் புள்ளிகள். ✶

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தந்தை செல்வா நினைவு

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் பிதாமகரான தந்தை செல்வாவின் 99ஆவது பிறந்த நாள் நினைவு தினம் இன்றாகும்.

ஈழத் தமிழர்களிடமிருந்து அபகரிக்கப்பட்ட அவர்களது இறைமையும் சுதந்திரமும் மீள்விக்கப்பட்டு, தனித் தமிழ் அரசு நிறுவப்படவேண்டும் என்ற கருத்தை முன்னெடுத்தவர் தந்தை செல்வா.

தாம் ஆளும் இனமாகவும், தமிழர்கள் ஆளப்படும் அடிமை இனமாகவும் இருக்க வேண்டும் என்ற நிலைப்பாடு உடையவர்கள் சிங்களவர். அவர்களிடமிருந்து பிரிந்து தமிழர் தாயகத்தில், சுயாதிக்க எல்லைக்குள் தனியரசு நிறுவுவதே தமிழர் விமோசனத்துக்கு ஒரே வழி என்று தீர்க்கதரிசனத்துடன் கூறியவர் அவர்.

சமஷ்டி அமைப்பின் கீழ் இரண்டு அரசுகளை நிறுவித் தன்னாட்சி உரிமையைத் தமிழர்கள் அனுபவிப்பதற்குக் கூட, சிங்களவர்கள் தடையாக இருக்கிறார்கள் என்பதனைக் கண்டு, தமது அரசியல் ஞானத்தால் உணர்ந்து, தமிழ் அரசை மீட்டெடுப்பதற்கு போராட வேண்டும் என்பதனை மக்களுக்கு உணர்த்தியவர் தந்தை செல்வா.

தனியரசு நிறுவும் முயற்சி வில்லங்கமானது என்றாலும் அதற்காகப் போராடுவதைத் தவிர வேறுமார்க்கம் இல்லை என்ற முடிவைத் துணிகரமாக வெளியிட்டவர் அவர்.

சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு எதிரான அகிம்சைப் போராட்டத்தை முன்னெடுத்து, தமிழர் இதயங்களில் விடுதலை உணர்வைக் கிளர்ந்தெழச் செய்தவர் அவரே.

அவர் நட்ட அந்த விதையும், இட்ட உரமும் தான் இன்று தமிழீழ விடுதலைப் போராட்டம் என்ற பெரு விருட்சமாகியுள்ளன,

அவர் மக்களுக்கு ஊட்டிய விடுதலை உணர்வு தான், போராட்டம் பல வகைப் பரிமாணங்களைக் கண்டு இன்றைய அதிஉச்ச வளர்ச்சி நிலை காண்பதற்கான உந்து சக்தியாக விளங்கியது என்பது மிகையல்ல.

இந்தக் கால் நூற்றாண்டு காலத்தில் சிங்களவர்கள் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விட்ட ஒடுக்குமுறைகள், அடக்குமுறைகள், அடாவடித்தனங்கள், அட்டூழியங்கள் மிகவும் அரக்கத்தனமானவை. தமிழர்கள் பட்ட அவலங்கள், படும் இன்னல்கள் சொல்லி முடியாதவை.

இவற்றையெல்லாம் தாங்கிக்கொண்டு மனம் தளராமல், உறுதிகுலையாமல் விடுதலை என்ற இலக்கை நோக்கிப் போராடும் தேசிய ஆத்மபலம் தமிழர்களுக்கு எங்கிருந்து வந்தது? தந்தை செல்வா அன்று ஊட்டிய விடுதலை உணர்வே அதன் ஆதார சுருதி.

தந்தை செல்வாவின் இலட்சியமான சுதந்திர தமிழீழம் அவரது நூறாவது பிறந்த நாளுக்கு முன் மலர்ந்தால் அவருக்குப் பெரும் கைமாறு செய்தவர்களாவோம்.

அந்த இலக்கை அடைவதற்கு, தமிழரை வழிநடத்துவதற்கு, தன்னிகரில்லாத் தானைத் தலைவன் பிரபாகரன் இருக்கிறார். சிங்களப் பேரினவாதத் தலைவர்களுக்கு பெரும் சவாலாக அவர் விளங்குகிறார்.

தமிழர் விடுதலையும், தனி அரசும் அவரின் இலட்சிய இலக்குகள். அவரின் பின்னால் தமிழர்கள் ஓரணி திரண்டால் தந்தை செல்வாவுக்கு கைமாறு செய்வது ஒன்றும் கடினமாகாது.

தந்தை செல்வாவின் ஆசை தலைவர் பிரபாவின் காலத்தில் தரிசனமாகட்டும்.

# போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து நூறு கொள்கலன்கள் அகற்றப்பட்டன

## விசாரணையில் கண்டுபிடிப்பு

கொழும்பு, மார்ச் 31

போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து கொழும்புத் துறைமுகத்தில் இருந்து கொள்கலன்கள் எடுத்துச் செல்லப்பட்டமை தொடர்பாக—

விசாரணை நடத்திவரும் இரகசியப் பொலீஸார் எட்டுக் கொள்கலன்கள் அகற்றப்பட்டமை சம்பந்தமான ஆவணங்களைக் கண்டுபிடித்துள்ளனராம்.

இந்த எட்டுக்கொள்கலன்களும் அகற்றப்பட்டமைக்கு இப்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள எட்டுச் சந்தேக நபர்களே சூத்திரதாரிகள் என்று நம்பப்படுகிறது.

போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து சுமார் நூறு கொள்கலன்கள் சட்ட விரோதமாகத் துறைமுகத்தில் இருந்து அகற்றப்பட்டமை விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இந்த மோசடியில் பல உயர்தர சுங்க அதிகாரிகள் சம்பந்தப்பட்டிருப்பதும் கண்டறியப்பட்டிருக்கிறது.

விதிகளை மீறி அகற்றப்பட்ட கொள்கலன்கள் சிலவற்றில் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் வந்ததாகவும் முன்னர் செய்திகள் வெளிவந்தது தெரிந்ததே. (அ)

## 50 வெற்றிடங்கள் 30 ஆயிரம் பேர் விண்ணப்பம்

கொழும்பு, மார்ச் 31

ஸ்ரீலங்கா கடற்படையின் மகளிர் படைப் பிரிவில் உள்ள ஐம்பது வெற்றிடங்களுக்கு 30 ஆயிரம் பெண்கள் விண்ணப்பித்திருப்பதாக கடற்படைப் பேச்சாளரை மேற்கோள் காட்டி அரசுப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (உ)

## குண்டு வீச்சு!

கொழும்பு, மார்ச் 31

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடியில் கடந்த புதனன்று சுமார்பத்து பொலீஸார் பயணம் செய்து கொண்டிருந்த ஜீப் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் குண்டு வீசித் தாக்குதல் நடத்தியதில் அது சேதமுற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. [உ-3]

## வவுனியாவில் சடலங்கள்: மர்மம் நீடிக்கின்றது

வவுனியா, மார்ச் 31

வவுனியா நகரப்பகுதியில் கடந்த புதன்கிழமை கண்டுபிடிக்கப்பட்ட இரு இளைஞர்களின் சடலங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன.

ஒரு சடலம் துணுக்காயைச் சேர்ந்த சிவகுமார் என்பவருடையது என்றும்—

மற்றையது கிளிநொச்சியைச் சேர்ந்த பி. தனபாலசிங்கம் என்பவருடைது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் எவரும் இதுவரை சடலங்களை பொறுப்பேற்க முன்வரவில்லை.

ஒரு சடலம் வவுனியா இரண்டாம் குறுக்குத்தெருவிலும், மற்றைய சடலம் ஹொரவப்பொத்தான வீதியிலும் கண்டுபிடிக்கப்பட்டன.

1995 டிசம்பரில் இருந்து வவுனியா நகரில் இப்படியான 18 சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

அனைவருமே சுட்டுக் கொல்லப்பட்டிருந்தனர். கொல்லப்படுவதற்கு முன் சித்திரவதை செய்ததுக்கான அடையாளங்கள் அநேகமான சடலங்களில் காணப்பட்டமை மர்மமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (இ)

## இடம்பெயர்ந்தோருக்கான பெப்ரவரி மாத ஒய்வூதியம்

### கிளிநொச்சியில் நாளை முதல்

யாழ் மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்தோருக்கான பெப்ரவரி மாத ஒய்வூதியத்தை நாளை முதலாம் திகதியிலிருந்து வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று கிளிநொச்சி செயலகக் கணக்காளர் திரு. அ. பாலகுமார் அறிவித்துள்ளார்.

ஜனவரி ஓய்வூதியம் வழங்கப்பட்ட அதே நடைமுறையிலேயே பெப்ரவரி மாத ஓய்வூதியமும் வழங்கப்படவுள்ளது. ஜனவரி மாத ஓய்வூதியத்தை பெற்றவர்களுக்கு அவர்களால் வழங்கப்பட்ட விருப்புரிமை வங்கிகளுக்கு மார்ச் மாதம் முதல் ஓய்வூதியம் அனுப்பி வைக்கப்படும்.

புதிதாக பெப்ரவரி மாத ஓய்வூதியம் பெறுவதற்காக யாழ்ப்பாணம் கச்சேரியினால் உறுதிப்படுத்தப்பட்டவர்கள், கிளிநொச்சிக் கச்சேரிக்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மார்ச் மாத ஓய்வூதியக் கொடுப்பனவுக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும். (இ-124)

## தளபதியின் வாகனத்தை முந்தியவருக்கு நேர்ந்த கதி!

கொழும்பு, மார்ச் 31

விசேட பாதுகாப்பு ஏற்பாடு ஏதுமின்றி— சாதாரண இலக்கத் தகட்டுடன்— கொழும்பு வீதியில் சென்று கொண்டிருந்த வாகனம் ஒன்றை தமது காரினால் முந்திச் செல்ல முயன்றமைக்காக பிரபல வர்த்தகர் ஒருவர் கொழும்பு வீதியில் வைத்து நையப்புடைக்கப்பட்டார்.

சமூகத்தில் உயர்வாக மதிக்கப்படுகின்ற— பிரபல தனியார் நிறுவனம் ஒன்றின் தலைவராக— பணிபுரியும் வர்த்தகர் ஒருவருக்கே இந்த 'கெட்ட அனுபவம்' கிடைத்திருக்கின்றது.

சில தினங்களுக்கு முன்னர் மாலை 5 மணியளவில் கிறீன் பாத்— சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா மாவத்தை ஆகியவற்றுக்கு அருகே இச் சம்பவம் நடைபெற்றது.

உத்தியோகபூர்வ அடையாளம் ஏதும் பொறிக்கப்படாத நிலையில் சென்று கொண்டிருந்த வாகனம் ஒன்றை தமது காரில் இவர் முந்திச் சென்றதாகவும்—

அந்த வாகனத்துக்குப் பின்னால் இரு மோட்டார் சைக்கிள்களில் — ரிசேர்ட், டிரவுஸர் அணிந்தபடி— வந்த நபர்கள் அவரது காரை பலவந்தமாக மறித்து, அவரைத் தாக்கியதாகவும் கூறப்படுகின்றது.

மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் தமது ''ரி-சேர்டுக்கு'' உள்ளிருந்த பிஸ்டலை உருவி, அதன் முனையாலும் அவரைத் தாக்கினராம்.

இதே சமயம் மோட்டார் சைக்கிள்களுடன் வந்த வாகனம் நிறுத்தாமல் தொடர்ந்து சென்றுவிட்டது.

காரில் வந்த வர்த்தகரின் சாரதி லைசென்ஸும் மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் பறிக்கப்பட்டது.

அதன் பின்னர்தான் மோட்டார் சைக்கிளுக்கு முன்னர் வந்த — சம்பந்தப்பட்ட — வாகனத்தில் சென்றவர் விமானப் படைத் தளபதி என்ற விடயம் காரில் வந்த வர்த்தகருக்கு, அங்கு வந்த பொலீஸார் ஒருவரால் தெரிவிக்கப்பட்டாகக் கூறப்பட்டது.

இந்த விடயம் குறித்து பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

இது குறித்து விமானப் படைத் தளபதி ஏயர் மார்ஷல் ஒலிவர் ரணசிங்கவிடம் கேட்டபோது அவர் கருத்துக் கூற மறுத்துவிட்டார்.

## இலவச கண்சிகிச்சை முகாம்

சாவகச்சேரி மார்ச் 31

யாழ். றோட்டறிக் கழகமும், பருத்தித்துறை ஸ்ரீராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமும் இணைந்து நடத்தவுள்ள இலவச கண்சிகிச்சை முகாம் (2) எதிர்வரும் புதன் கிழமை நடைபெறவுள்ளது.

கண் சிகிச்சை முகாம் அன்று காலை 8. 30 மணிக்கு சேவாச்சிரமத்தில் ஆரம்பமாகும் என்றும்—

ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்கள் நாளை திங்கட் கிழமை மாலை தமது பெயர்களைப் பதிவு செய்து கார்ட் பெறலாம் என்றும் —

வடமராட்சி கிழக்கு மக்களுக்கு சிகிச்சையில் முன்னுரிமை வழங்கப்படும் எனவும்— அறிவிக்கப்பட்டது. (அ)

## நாகதம்பிரான் பொங்கல் உற்சவம்

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய ஆண்டு உற்சவ பங்குனி உத்தரப் பொங்கல் எதிர்வரும் 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவிருக்கிறது.

நாட்டு நிலைமை காரணமாக பண்டம் எடுக்கும் வைபவம் இம் முறை கோயிலடியிலேயே நடைபெறவிருக்கிறது.

அடியார்களின் நலன் கருதி விசேட போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

## தமிழீழ வானொலி

ஞாயிறு மாலை

5-00 — ஆரம்பம் — சிந்தனைச் சிதறல்
5-02 — எழுச்சி கீதம்
5-10 .. அழியாத கோலங்கள்
5-30 — மதுரத்தின் மதுர வேளை
5-45 — உங்கள் தெரிவு
6-00 — புதியவை
6-10 — செய்திகள்
6-15 — உங்கள் தெரிவு
6-30—ஒலிபரப்பு நிறைவு

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

ஞாயிறு இரவு

8-00 —ஆரம்பம்
8-02 — தொடர் நாடகம் (இலங்கை மண்)
8-20 — வரலாறு சொல்லும் பாடம்
8-30 — செய்திகள்
8-40 — அறிவிப்புக்கள் தொடர்ந்து மீண்டும் 9-00 மணி வரை தாயகப் பாடல்கள்.

திங்கள் காலை

7-00 — ஆரம்பம்
7-02—மாவீரர் வணக்கம்
7-10 — நீங்கள் கேட்டவை
7-30 — செய்திகள்
7-35—பத்திரிகைச் செய்திகள்
7-45 — அறிவிப்புகளைத் தொடர்ந்து 8-00 மணி வரை தாயகப்பாடல்கள்.

# இடம்பெயர்ந்து வன்னி சென்றோர் குடியிருப்பு காணி பெற ஏற்பாடு

கிளிநொச்சி மார்ச் 31

வலிகாமத்திலிருந்து இடம் பெயர்ந்து வன்னிப்பகுதிகளில் தங்கியிருக்கும் மக்களுக்கு குடியிருப்புக் காணிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் காணிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன உள்கட்டுமானப் பிரிவினர் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

ஒரு குடும்பத்துக்கு ஓர் ஏக்கர் காணி வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

இடம்பெயர்ந்தோரிடமிருந்து அது தொடர்பாக ஏற்கனவே விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

குடியிருப்புக் காணிகளைப் பெற விண்ணப்பித்தோர் கிராம சேவகர் பிரிவு ரீதியாக பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரை தற்போது சந்தித்துவருகின்றனர்.

அந்த வரிசையில் இன்று 31 ஆம் திகதி தொடக்கம் 4 ஆம் திகதி வரையிலான சந்திப்பு நேரம், இடங்கள் வருமாறு.

★ 31- 3- 96 — காலை 10.00 — கிளிநொச்சி —உருத்திரபுரம் மேற்கு,உருத்திரபுரம் கிழக்கு, சிவநகர், குஞ்சுப்பரந்தன் — இடம் — கமநல சேவை இணைக்களம் உருத்திரபுரம்.

★ 1-4-96 — மாலை 3.00 — கிளி.நகர், கணேசபுரம் — இடம் — [illegible] மகாவித்தியாலயம். [illegible] புதுமுறிப்பு — இடம் — புதுமுறிப்பு விக்கினேஸ்வரன் வித்தியாலயம்.

★ 2-4-96 — காலை 10.00 — மாயவனூர், வட்டக்கச்சி, சிவிக் சென்றர் — இடம் — வட்டக்கச்சி ம. வி.

★ 2- 4- 96 — பி. ப 3.00 — மாவடியம்பன், இராமநாதபுரம் — இடம் — இராமநாதபுரம் மாகவித்தியாலயம்.

மாலை 4.00 — கல்மடுநகர் — இடம் — இராமநாதபுரம் ம. வி.

★ 4-4-96 — காலை 9.30 — பன்னங்கண்டி, மருதநகர் — இடம் — பன்னங்கண்டி அ. த. க. பாடசாலை.

மாலை 2.30 — திருவையாறு 1, திருவையாறு 2, திருவையாறு 3, இரத்தினபுரம் — இடம் — திருவையாறு ம. வி. (இ-ரி-124)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வெற்றிலைக்கேணியில்..,

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
பாதுகாப்பு வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்தன.
இத் தாக்குதல் சம்பவம் பற்றிய மேலதிக விவரங்கள் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லை.
(உ-3-6-7)

## நன்றி நவிலல்

### அமரர் ராஜசிங்கம் தம்பிமுத்து

(பிரபல வர்த்தகர், நாச்சிமார் கோவிலடி)

மலர்வு:
**15 - 05 - 1909**

உதிர்வு:
**21 - 02 - 1996**

எமது குடும்பத்தின் ஒளி விளக்காய்த் திகழ்ந்து, அன்புக்கும், பண்புக்கும், பாசத்திற்கும் உறைவிடமாக வாழ்ந்து நமக்கெல்லாம் நல்வாழ்வளித்த எமது அன்புத் தெய்வத்தின் இறுதிச் சடங்கிலும், அந்தியேட்டிக் கிரியைகளிலும் கலந்து கொண்டும், நாம் துயருற்றிருந்த வேளையில், அனைத்து வழிகளிலும் பங்கு கொண்டு உதவி, ஒத்தாசை புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், அடுத்து 22-3-96 (வெள்ளிக்கிழமை) எமது இல்லத்தில் நடைபெற்ற சமயக் கிரியைகளிலும். மதிய போசனத்திலும் கலந்து கொண்டவர்கள் எல்லோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

'' தேவியகம் '',
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

[40400]

## நான்காம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்: 10 — 06 — 1926

மறைவு: 15 — 03 — 1992

அமரர்

### காசிப்பிள்ளை சபாரத்தினம்

**திதி: 31 — 03 — 96**

இறைவனடி சேர்ந்து
நான்காண்டுகள் சென்றது பப்பா
இணையில்லா அன்பு முகம்
எங்கள் இதயத்தில் அழியவில்லை
வையகத்தில் இருக்கும்
உம்மவர்கள் இத்திதியில் ஆத்ம
சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பிரியமுள்ள மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளை.

சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

(சி-4156)

## மரண அறிவித்தல்

### நல்லையா நவரத்தினம்

புன்னாலைக்கட்டுவன் வடக்கைச் சேர்ந்தவரும், தற்போது அல்லாரை தெற்கு, மீசாலையை வசிப்பிடமாகக் கொண்டவருமான நல்லையா நவரத்தினம் நேற்று (30-3-96) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் திருமதி நல்லம்மாவின் அன்புக் கணவரும், நளாயினி, நரேந்திரன், நிரஞ்சனி (லிகிதர், வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்), நவரஞ்சன், நித்தியா. நவநீதன் ஆகியோரின் அருமைத் தந்தையும், காலஞ்சென்ற திருமதி அன்னம்மா நாகலிங்கம், தர்மலிங்கம், இராசநாயகம் ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுக்கிரியைகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும் என்பதை உற்றார், உறவினர் நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
ந. நரேந்திரன்
(மகன்)

மே/பா. செ. தங்கராசா,
கச்சாய் வீதி,
அல்லாரை தெற்கு,
மீசாலை.

(41275)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 31-03-96 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

## சுட்டுக்கொலை

பிரபல வர்த்தகரான மாக் விஜயசேகரா என்பவர் வங்கிக்கு மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த சமயம் வியாழனன்று கம்பஹாவில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இருவரினால் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது. (உ-3)

## தமிழர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
திய மத்திய அரசு மூலம் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

★ இந்துமத கோட்பாடுகளின் அத்வைத வேதாந்த தத்துவ அடிப்படையில் மக்களையும், விடுதலைப் புலிகளையும் பிரிக்கமுடியாது.

★ வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள இந்துமதத்தின் பாரம்பரிய பொக்கிசமாக விளங்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க புனித இந்து ஆலயங்கள் சிங்கள பௌத்த பேரினவாத அரசின் இராணுவ நடவடிக்கையால் திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருகின்றன.

★ வடக்கு கிழக்கில் மூவாயிரம் ஆலயங்களில் மதசெயல்பாடுகளான நித்திய பூசை, நைமித்திய பூசை, காமிக பூசைகள் நடைபெறாமல் ஈழத்தமிழர்கள் துன்பம் அடைகின்றனர்.

இந்த மகஜரின் பிரதிகள் ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதிபதி, மதுரை, தருமபுரம், திருவாவடுதுறை, ஆதீனங்களின் பீடாதிபதிகளுக்கும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. (அ-3-124)

## சர்வதேச.,-

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
வைத்து அரசியல் தீர்வு காண கடுமையாக உழைக்க வேண்டும் என்று ஐந்து தமிழ்க் கட்சியினரிடமும் இந்தியத் தூதுவர் கேட்டுக் கொண்டார்.
(உ-3)

## வடக்கில்..-

((1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
நூறுக்கும் அதிகமான படையினர் காயமடைந்து செயல் இழந்துள்ளனர் என்றும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

வடக்குக்கு துருப்புகளை அனுப்புவதற்காக கிழக்கில் இருந்து — சுமார் இரண்டு டசின் — படைப்பிரிவுகள் கடந்த வருட மத்தியில் வாபஸ் பெறப்பட்டன. அதனால் கிழக்கில் புலிகளின் தாக்குதல் பலம் அதிகரித்திருக்கின்றது என்பதை இராணுவம் ஒப்புக்கொள்கின்றது.

ஏப்ரலில் வடக்கில் மேற்கொள்ளப்படவிருக்கும் இராணுவ நடவடிக்கைக்காக கிழக்கிலிருந்து மேலும் துருப்புகளை வாபஸ் பெற்றால் அது ஸ்ரீலங்காப் படைகளுக்கு பேரிழப்பையே தரும் என ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஆனால் —

எதிர்வரும் ஜூன் 30 ஆம் திகதிக்கு முன்பாக நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்களுக்கு முன்னர், அரசுக்கு யுத்த முனையில் ஒரு வெற்றி கிடைக்குமானால் அது தேர்தலில் அரசுத் தரப்புக்கு ஓர் ஊக்குவிப்பாக அமையும் என அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

- இவ்வாறு அப்பத்திரிகை தகவல் வெளியிட்டிருக்கின்றது. [உ]

## அடுத்த...-

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
களின் போது மனித உயிர்களுக்கு ஏற்படும் அழிவிலும் பார்க்க பொருளாதார அழிவுகளுக்கே முக்கியம் கொடுக்கும்படி விடுதலைப் புலிகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும்—

இத் தாக்குதல்கள் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை முற்றிலுமாக முடக்குவதே புலிகளின் திட்டமெனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## ஆத்ம சாந்தி

### திருமதி கனகம்மா தருமலிங்கம்

**28-3-96** அன்று தனது அருமைத் தாயாரை இழந்து ஆறாத்துயரில் இருக்கும் எமது கல்லூரி உப அதிபரும், எமது சங்க நிர்வாகசபை உறுப்பினருமான
செல்வி ச. தருமலிங்கம்
அவர்களுக்கும், குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி!

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
வேம்படி மகளிர் கல்லூரி.

[சி-4153]

## அகில இந்திய காங்கிரஸ் தமிழக காங்கிரஸாகியது

தமிழக காங்கிரஸ் கட்சி தொண்டர்களின் விருப்புக்கு மாறாக அ தி. மு. கவுடன் தமிழ் நாட்டில் கூட்டு வைக்க காங்கிரஸ் கட்சி முடிவு எடுத்ததை அடுத்து தமிழக காங்கிரஸ் தலைமையகமான சென்னை சத்தியமூர்த்தி பவனில் நேற்றும் பல அசம்பாவிதங்கள் இடம்பெற்றன.

''அகில இந்திய காங்கிரஸ் அறக்கட்டளை'' என அங்கு இருந்த பெயர்ப்பலகை ''தமிழக காங்கிரஸ் அறக்கட்டளை'' என மாற்றம் செய்யப்பட்டது.

இதற்கிடையில் தற்போதுதைய சூழ்நிலை குறித்து தமிழக காங்கிரஸின் மூத்த பிரமுகர் கருப்பையா மூப்பனார் தமிழகத்தின் பல கட்சித் தலைவர்களுடனும் பேச்சு நடத்தி வருகிறார். காங்கிரஸிலிருந்து அண்மையில் வெளியேறி அகில இந்திய இந்திரா காங்கிரஸ் என்ற தனிக் கட்சியை அமைத்த— அர்ஜுன் சிங், திவாரி, வாழப்பாடி அணியைச் சேர்ந்த — பிரமுகர்களுடனும் மூப்பனார் பேச்சு நடத்தினார். தமது முடிவை எடுப்பதற்கு இன்றுவரை — மேலும் ஒருநாள் — கால அவகாசம் வழங்கும்படி அவர் கேட்டார்.

இநனிடையே தமிழக காங்கிரஸில் எழுந்துள்ள நெருக்கடிநிலை குறித்து ஆலோசனை நடத்துவதற்காக காங்கிரஸின் தமிழகத் தலைவர் குமரி அனந்தன் நேற்று புதுடில்லி விரைந்தார். (உ-7)

## தமிழக காங்கிரஸ் ஆதரவு தி. மு. க. எதிர்பார்க்கிறது

'' தி. மு. க. வுக்கு தமிழக காங்கிரஸின் ஆதரவுகிடைக்கும் என நம்புகிறோம். மூப்பனார் எமக்கு ஆதரவளித்தால் அதை ஏற்போம். அவரது ஆதரவை தட்டிக்கழிக்கும் அளவுக்கு நாம் அரசியல் விவரம் புரியாதவர்கள் அல்ல. ''

இவ்வாறு தி. மு. க தலைவர் மு. கருணாநிதி நேற்று தெரிவித்தார். [உ-7]

## ஜெயலலிதாவுக்கு ரஜனி எச்சரிக்கை விடுக்கிறார்

அ. தி. மு. க. — காங்கிரஸ் கூட்டணி பற்றிய அறிவிப்பை அடுத்து, அமெரிக்காவிலிருந்து அறிக்கை விடுத்துள்ள நடிகர் ரஜனிகாந்த் அந்த அறிக்கையில் ஜெயலலிதாவுக்கு எச்சரிக்கை விடுத்திருக்கின்றார்.

''சகோதரி ஜெயலலிதாவுக்கு ஓர் முன் எச்சரிக்கை. நீங்கள் தமிழக மக்களையும் வாழ வைக்காமல் அவர்கள் அளித்த அரச அதிகாரத்தையும் நல்வழியில் பயன்படுத்தாமல் சுய நலத்திற்காக அதிகார துஷ்பிரயோகம் செய்து பணத்தைச் சம்பாதித்தீர்கள்.''

''இப்போது அந்தப் பணத்தை வைத்து புதுடில்லியை விலைக்கு வாங்கிவிட்டீர்கள். ஆனால் அதே பணத்தைக் கொண்டு தமிழக மக்களையும் தமிழ் நாட்டையும் வாங்க முடியும் என்று கனவிலும் நினைக்க வேண்டாம். உண்மை கசக்கும். மன்னிக்கவும்'' — இப்படி அந்த அறிக்கையில் ரஜனி குறிப்பிட்டுள்ளார். [உ-7]

## பல பழைய முகங்களுக்கு ஜெயலலிதா கல்தா!

தமிழக சட்டசபைத் தேர்தலில் 168 தொகுதிகள போட்டியிடும் அ. தி. மு. க., இதுவரை 153 வேட்பாளர்களின் பெயர்ப் பட்டியலை வெளியிட்டுவிட்டது. ஆனா அதில் தற்போதைய சட்டசபையில் இடம்பெறும் பத் அமைச்சர்கள் உட்பட 108 உறுப்பினர்களின் பெயர்க இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஊழல் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பா கடுமையான குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியிருக்கும் அமை சர்கள் இந்திரா குமாரி, செல்வகணபதி, மதுசூதனன் மற்று பொன்னுசாமி அம்மமுத்துப்பிள்ளை, கிருஷ்ணசாமி, டாபிராமன், நாகூர் மீரான் ஆகியோரின் பெயர்கள் வேட் பாளர் பட்டியலில் இடம்பெறவில்லை.

### தலைவரின் முடிவால் சீற்றம்:

## தங்களுக்குத் தாங்களே தொண்டர்கள் செருப்படி

முதலமைச்சர் ஜெயலலிதாவைக் கடுமையாக சாடி வந்த எம். ஜி. ஆர். அ. தி. மு. கவின் தலைவர் திருநாவுக்கரசு திடீரென தமது கட்சியை அ. தி. மு. கவுடன் இணைத்து ஜெயலலிதாவிடம் சரணடைந்ததை அடுத்து —

எம். ஜி. ஆர். அ. தி. மு. க. தொண்டர்கள் நேற்று முன் தினம் காலையில் அண்ணா சமாதிக்கு முன்னால் நின்று தமக்குத் தாமே செருப்புகளால் அடித்து தம்மைத் தாமே நொந்து கொண்டனர்.

அ. தி. மு. கவின் சட்டசபை வேட்பாளர் பட்டியலில் திருநாவுக்கரசின் பெயரும் இடம் பெற்றிருக்கின்றது. [உ-7]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org